**O.S.No. 75 /2015**

**நாள்:26.07.2022**

***வா.சா.1 சத்தியநாராயணன்***

***<u>2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>***

என்னுடைய சொத்தின் ச.எண்.277/8-ல் உள்ள கடையை வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய சொத்து ச.எண்.277/8-ல் உள்ள கடைக்கும் தாவா சொத்து ச.எண்.21/5 சந்தை புறம்போக்குக்கும் இடையில் பிரதிவாதிகளின் நிலம் பட்டாவாக உள்ளதால் நான் கோரும் வசதிபுழக்க உரிமை கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய ச.எண்.277/8-க்கு தருமபுரி கடத்தூர் மெயின் ரோட்டில் இருந்து சென்று வர பாதை உள்ளதால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தென்புறம் மாடிபடி உள்ளதால் சந்தை புறம்போக்கு வழியாத்தான் செல்ல முடியும். ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்லிஉள்ளேன் அதை நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளேனா என்றால் நிரூபித்துள்ளேன். பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பு சந்தைபுறம்போக்கு பகுதியிலோ அல்லது ச.எண்.277/8-ல் செய்யவில்லை என்றால் செய்துள்ளார்கள். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.21/13-ல் தான் நீண்ட நெடுங்காலமாக அவர்களுக்கு பாத்தியப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகளின் ச.எண்.21/13-ல் நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் சொல்வது தவறு பிரதிவாதிகளுக்கு நத்தம் சர்வே எண்.21/13 பட்டா எண்.369 வழங்கப்பட்டது எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் அதனை அனுசரித்து அவர்களுக்குள் குடும்ப தானசெட்டில்மெண்ட் ஏற்பட்டது எனக்கு நன்றாக தெரியும் என்றும் அதை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட நத்தம் பட்டா எண்ணில் தான் சரவணன் என்பவருக்கு அக்கிரமமாக வாடகைக்கு விட முயற்சி செய்தேன் என்றால் இல்லை. அதை பிரதிவாதிகள் தடை செய்ததால் தான் பிரதிவாதிகள் மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தான அரசு சந்தை புறம்போக்கு சஎண்.21/5-க்கு நான் எவ்விதமான தாவாவில் கோரிய பரிகாரமும் கோரயியலாது என்றால் சரியல்ல. என்னுடைய தாவா சொத்து விவரத்தில் செக்குபந்தி சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து விவரத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள 8-க்கு 8 என்ற அளவு மீட்டரா அடியா லிங்க்ஸ்யா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சந்தை புறம்போக்கு பகுதியான வழக்கு சொத்தில் வாதிகள் பயன்படுத்தும் வாசற்பகுதியில் என்று சொல்லி உள்ளேன் அதில் எந்ததிசை நோக்கிய வாசல் எவ்வளவு அளவு என்று சொல்லவில்லை என்றால் 8-க்கு 8 மட்டும் சொல்லிஉள்ளேன். வழக்கு சொத்து 1 ஏக்கர் 28 சென்ட் விஸ்தீரணம் கொண்ட சந்தை புறம்போக்கு என்னுடைய நீண்ட கால புழங்குரிமை என்பது கிடையாது என்றால் உள்ளது.

அதனால் என்னுடைய விளம்புகை பரிகாரம் தள்ளுபடியாகக்கூடியது என்றால் சரியல்ல. என்னுடைய தாவா பரிகாரமான 2வது பரிகாரம் 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தான சந்தை புறம்போக்கில் எவ்விதமான ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதால் நான் கோரிய செயலுருத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. அரசு சொத்தான சந்தை புறம்போக்கு பகுதி வழக்கு சொத்தை நான் அனுபவிப்பதை 1 முதல் 3 பிரதிவாதிகளும் தடை செய்யக்கோர நிரந்தர உறுத்துக்கட்டளை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அரசு சந்தைபுறம் போக்கான வழக்கு சொத்திற்கு பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்விதமான உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரயியலாது என்றாலும் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் பிரதிவாதி பெட்டிக்கடை மற்றும் ஏ,பி,சி,டி சிகப்பு வண்ணமிட்ட பகுதியும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு சஎண்.21/13-ல் பகுதி வழக்கு சொத்தான சந்தைபுறம்போக்கு அல்ல என்றால் சரியல்ல. ச.எண்.21/5-ல் அமைந்துள்ள பேருந்து நிலையம், காவல் நிலையம், அரசு மருத்துவமனை, சீனிவாச பெருமாள் கோவில் ஆகியவரை தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.277/8 ஊர்நத்தம் பகுதி என்றால் சரிதான். பிரதிவாதிகளின் ச.எண்.21/13 செல்லாது என்றால் என்னுடைய 277/8 ஊர்நத்தம் செல்லாது என்றால் சரியல்ல. 21/13என்பது பிரதிவாதிகள் 50 ஆண்டுகளான அனுபவித்து வந்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது தாயார் சுந்தரி பெயரில் நத்தம் பட்டாவாக வழங்கப்பட்ட பகுதி என்றால் இல்லை. அவ்வாறு சுந்தரியம்மாள் 1 பிரதிவாதி சுந்தர்ராஜன் பெயரில் வழங்கப்பட்ட சர்வே எண்.21/13 பட்டா பகுதிக்கு வடக்கு புறம் என்னுடைய சொந்த நிலமும் தெற்குபுறம் வழக்கு சொத்தான சந்தை புறம்போக்கு உள்ளது என்றால் இருக்கிறது ஆனால் 13 அல்ல. பிரதிவாதிகளின் நத்தம் சர்வே எண்.21/13ஐ மறைத்து வழக்கு சொத்தான நத்தம்புறம் போக்கிற்கு நான் கோரும் புழக்கஉரிமை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரிலும் அவரது தாயார் சுந்தரியம்மாள் பெயரில் வழங்கப்பட்ட நத்தம் பட்டாவை 1ம் பிரதிவாதி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. நத்தம்பட்டா படியும் தானசெட்டில்மெண்ட் படியும் 1 முதல் 3 பிரதிவாதிகள் சந்தைபுறம்போக்கு பகுதிக்கு வடக்கும் என்னுடைய நிலத்திற்கு தெற்கும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை அவ்வாறு பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட நத்தம் பட்டா எண்.369 வருவாய் துறையில் உரிய உத்தரவின் பெயரில் வழங்கப்பட்டது என்றால் இல்லை. பிரதிவாதிகள் பெயரில் உள்ள சொத்திற்கான நத்தம் பட்டா பகுதி கிராம புலப்படநகலில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

புலப்பட நகலில் பிரதிவாதிகள் பகுதி குறியீடு செய்துள்ள விவரம் எனக்கு நன்றாக தெரிந்திருந்தும் வழக்கு சொத்திற்கான புலபட நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசு சொத்திற்கு நான் கோரும் எந்த பரிகாரமும் பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கக்கூடியதல்ல என்னுடைய வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.